1969 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 236, 237 ஆகியவை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Education to blind students.

*238 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. Minister for Education and Industries be pleased to state :

(a) whether it is proposed to impart instructions to blind students along with others in certain select schools in each district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Sir, is it a fact that a year ago from the Government side a statement was issued that these blind students would be given extra facilities to get education in ordinary schools so that the inferiority complex which the blind students have by studying only in blind schools would be got over by clubbing them with other students?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அமெரிக்கன் ஃபவுண்டேஷன் ஃபார் தி ஓவர்ஸீஸ் ப்ளைண்ட் என்ற ஒரு நிறுவனம் இதுபோன்ற ஒரு ப்ரபோசலை நம்முடைய அரசுக்குக் கொடுத்தார்கள். நம்முடைய அரசு அதைப் பரிசீலனை செய்தது. குருடர்கள் மற்றவர்களோடு • சேர்ந்து படிக்கலாம் என்றாலும், அதுவே அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மையை (இன்பீரியாரிடி பீலிங்) ஏற்படுத்தும் என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிப் பரிசீலிப்பதை அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், கண்பார்வையற்ற குழந்தைகள் படித்துவரும் பள்ளிகளில் சாதாரணக் கல்வியைப் படித்துக்கொடுப்பதைப் போல் தொழிற் கல்வியையும் படித்துக்கொடுப்பதற்கான வாய்ப்பை இப்பொழுது இருக்கிற பள்ளிகளிலே விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கண்பார்வையற்றவர்களுக்கு எந்த விதமான கல்வி வேண்டுமென்பதைப் பரிசீலித்து அவ்வப்பொழுது முடிவு எடுத்து அந்தவிதமாக கல்வியை அவர்களுக்குத் தருகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு தொழில் கல்வி கற்றிருக்கும் கண்பார்வையிழந்த மாணவர்கள் எந்த வேலையும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது உள்ள விதிமுறைகளின் படி தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு ஓரளவு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லிவருகிறோம். அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை.

திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் கண்பார்வையிழந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற பள்ளிக்கூடங்கள் எத்தனை இருக்கின்றன ? எவ்வளவு மாணவர்கள் படித்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வில் வசதியேற்படுத்துவதற்கு ஏற்ற முறையில் என்ன என்ன கல்விகள் கற்பித்துக் கொடுக்கப்படுகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.